……………………………………………………………………………........ ஆகிய நான் அரச சேவையிலும், “சுத்தமான கை”களிலும் உறுப்பினராவேன். இது அரச சேவையிலுள்ள ஊழலை ஒழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசதுறை அலுவலர்களின் குழுமம் ஆகும். அரச சேவையின் புகழ் மற்றும் நம்பகத் தன்மை மற்றும் மக்களின் நம்பிக்கை, அதன் உறுப்பினர்களின் மாசற்ற நேர்மையில் கட்டியெழுப்பப்பட்டதுடன், அதனில் சார்ந்திருக்கின்றது என்பதனையும் நான் அறிவேன்.

ஊழலுக்கு எதிரான அரச துறை அலுவலர்களின் கூட்டமைப்பின் “சுத்தமான கைகளின்” யாப்பை ஏற்று அதன் பிரகாரம் உறுதியாக கடைப்பிடிப்பேன்.

“சுத்தமான கை”களின் தொலை நோக்கு, பணிநோக்கு, குறிக்கோள் என்பவற்றை வாசித்து விளங்கிக் கொண்டேன். நான் இதற்கு முழுமையான சம்மதம் தெரிவிப்பதுடன், இதனில் தீவிரமாக ஈடுபட்டு இதன் குறிக்கோள்களை அடைய முழு முயற்சியில் ஈடுபடுவேன். கூட்டணியின் குறிக்கோள்களுக்கு மாறான மற்றும் அதன் கொள்கைகளுடன் முரண்படும் வகையில் தீர்மானத்தை மேற்கொள்ளவோ அல்லது நடவடிக்கை எடுப்பதையோ தவிர்த்துக் கொள்வேன்.

“சுத்தமான கை”களினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கவியல் கோவையை நான் வாசித்து விளங்கி மற்றும் முழுமையாக கட்டுண்டு, எதிர்ப்பின்றி அல்லது இணங்க நடப்பேன் என வெளிப்படுத்துகின்றேன்.

ஊழல் நடவடிக்கைகள் சம்பந்தமாக என்னால் பெறப்படும் தகவல்களை உரிய அதிகாரிகளுக்கும் “சுத்தமான கை”களுக்கும் தெரியப்படுத்துவேன். எனது அரச பதவியை அல்லது எனது பாதுகாப்பிலுள்ள அரச சொத்துக்களையும் மற்றைய பொது சொத்துக்களையும் முறையற்ற வகையில் அல்லது எனது தனிப்பட்ட நலனுக்கு, எனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் நலன்பெறும் வகையில் பயன்படுத்த மாட்டேன் என நான் வெளிப்படுத்தி உறுதியளிக்கின்றேன்.

எனது பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றும் போது, அரச கொள்கைகளுக்கும் அதன் ஏற்பாடுகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் அமைய “சுத்தமான கை”களின் குறிக்கோள்களின் வழிகாட்டலுடன், இலங்கை அரச சேவை அதன் ஒழுக்கவியல் முறையில் ஊழல் அற்றதாகவும், பொறுப்புடைமை உள்ளதாகவும், வெளிப்படைத் தன்மை உள்ளதாகவும், அதன் பணி நோக்கை மேம்படுத்துவதற்கான என்னாலான முயற்சிகளை மேற்கொள்ளுவேன் என நான் பயபக்தியுடனும் நேர்மையுடனும் வெளிப்படுத்தி உறுதியளிக்கின்றேன்.

………………………… ………………………

கையொப்பம் திகதி